DEPOSITION OF WITNESS
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM
C.C.No.43/2025
PW - 5

| | | |
|---|---|---|
| Name | : | மனோகரன் (Lw - 5) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 24.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2024 முதல் 2025ம் வருடம் வரை நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன்.

கடந்த 15.09.2024ம் தேதி எனது தலைமையில் தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் மற்றும் முதல் நிலை காவலர் திரு.பாஸ்கரன் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தோம். அன்றைய தினம் காலை 07.45 மணியளவில் வாழவந்திநாடு காவல்நிலைய எல்லைக்குட்பட்ட அரியூர்நாடு புதுவளவில் மேல்கலிங்கம் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த துரைசாமி என்பவரின் வீட்டின் அருகே கண்காணித்தபோது சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் பிராந்திபாட்டில் உடன் நின்று கொண்டிருந்தார். எங்களை பார்த்ததும் அவரை சுற்றி இருந்த நபர்கள் ஓடிவிட்டார்கள்.

எதிரியை நாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் துரைசாமி த.பெ.பழனிகவுண்டர் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக அரசு மதுபானத்தை விற்பனைக்கு வைத்துள்ளதாக கூறினார். அதனால் காலை 08.00 மணிக்கு ஆஜர் எதிரியை காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் எதிரியை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பொதுஜன சாட்சிகள் யாரும்

இல்லாததால் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் மற்றும் முதல் நிலை காவலர் திரு.பாஸ்கரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரி துரைசாமி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் அரசு மதுபானத்தை விலைக்கு வாங்கி அதை அதிக விலைக்கு விற்பனைக்கு வைத்திருப்பதாகவும் அந்த பிராந்தி பாட்டில்களை தனது வீட்டின் அருகே இருக்கும் புதர் மறைவில் மறைத்து வைத்திருப்தாகவும் கூறினார்.

பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி தான் புதரில் மறைத்து வைத்திருந்த விற்பனைக்காக வைத்திருந்த 180 ML அளவுள்ள 30 பிராந்தி பாட்டில்களை அஜர் செய்தார். அதை தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் மற்றும் முதல் நிலை காவலர் திரு.பாஸ்கரன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன்.

பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம்வந்து சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.541/2024 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒரு நகலை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் எதிரியை தக்க பிணையில் விடுவித்தேன்.

பின்னர் 15.09.2024ம் தேதி தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் மற்றும் முதல் நிலை காவலர் திரு.பாஸ்கரன் ஆகியோர் சம்பவ இடம் சென்று மாலை 16.30 மணிக்கு பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் மற்றும் முதல் நிலை காவலர் திரு.பாஸ்கரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(**மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

பின்னர் கைப்பற்றப்பட்ட மதுபான பட்டில்களை நாமக்கல் மாவட்ட உதவி ஆணையர் (கலால்) அவர்கள் வசம் ஒப்படைத்தேன். பின்னர் சாட்சிகள் தலைமை காவலர் திரு.சந்திரசேகரன், முதல் நிலை காவலர் திரு.பாஸ்கரன், ஈஸ்வரமூர்த்தி மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுஜனம் நடமாட்டம் உள்ள இடம்

நிறைய வீடுகள் அமைந்துள்ள பகுதி என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் இருந்த வீடுகளில் இருந்த பொதுஜனங்களை யாரையும் எதிரி அரசு மதுபானங்களை உரிமம் இன்றி விற்பனை செய்கிறாரா என்பது பற்றி விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. எதிரி அரசு மதுபான கடைகளில் மது வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த மதுபான கடையில் எதிரிதான் மதுபானத்தை வாங்கினார் என்பதை உறுதி படுத்தும் வகையில் ரசீதுகள் எதையும் கைப்பற்றவோ அல்லது அரசு மதுபான கடை ஊழியர்கள் யாரையும் விசாரிக்கவோ இல்லை என்றால் சரிதான். மேற்படி மதுபான பாட்டில்களை எதிரி வெள்ளைநிற சாக்கு பையில் வைத்திருந்ததாக சொல்லப்படும் நிலையில் மேற்படி வெள்ளைநிற சாக்கு பையை கைப்பற்றி ஒப்படைத்தேனா என்றால் இல்லை. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மதுபானங்களை கைப்பற்றும்போது புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் மதுபானங்களை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பாட்டில்கள் என் முன்னிலையில் திறந்து பார்க்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் ஏற்கனவே பிற வழக்குகளில் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில் வைத்திருந்த மது பாட்டில்களை எதிரியிடம் இருந்து கைப்பற்றியதாக கூறி எதிரியின் மீதுபொய்யாக முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**